# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 15 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை : ரூ. 10


# திமுக அரசு செய்தாக வேண்டிய மூன்று பெரும் பணிகள்..

**1** தமிழ்த்தேசிய இனத்தினரைத் தமிழர் என்று பதிவிடும் நிலை உருவாக்க வேண்டும்..

**2** தமிழ்நாட்டு இலச்சினையில் குமரி ஐயன் திருவள்ளுவர் சிலையையோ அல்லது திருக்குறள் பொத்தகத்தையோ இடம்பெறச் செய்ய வேண்டும்..

**3** தமிழ்நாடு நாள் விழாவைவும் தமிழ்நாட்டிற்கெனக் கொடியையும் தமிழ்நாடு அரசு அறிவிக்க வேண்டும்..

1

## தமிழன் என்று பதிவு செய்யும் நிலையை உருவாக்க வேண்டும்..

உலகில் உள்ள மக்கள் அனைவராலும் தாங்கள் சார்ந்த மொழித் தேச அடையாளத்தைப் பதிவு செய்துகொள்ள முடிகிறது..

சீன மொழியினர் தங்களைச் சீனர்கள் என்றும், ஜெர்மானிய இனத்தினர் ஜெர்மானியர்கள் என்றும் பிற இனத்தவர் அனைவரும் அவரவர்கள் இனத்தினைப் பதிவை செய்து கொள்ள முடிகிறது..

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ஒபாமா அமெரிக்கக் குடிமகனாக பதிவு செய்து கொண்டிருந்த அதே போது தன் தேசிய இனமாக (நேஷனாலிட்டி) கென்யன் □ என்றே தன் இனத்தைத் தன்னுடைய பிறப்புச் சான்றிதழிலே பதிவிட்டிருக்க முடிந்தது..

ஆனால் நாமெல்லாம் தமிழர்களாக மிக நீண்ட நெடிய மரபினம் சார்ந்தவர்களாக இருந்த போதும் நம் தேசிய இனத்தின்வழி நம்மைத் தமிழர்கள் என்று பதிவு செய்து கொள்ளுகிற உரிமை இல்லாமல் கிடக்கிறோம்..

நாமெல்லாம் இந்திய அரசியல் சட்டத்தின்படி இந்தியக் குடிமக்களாக இருப்பது என்பது வேறு.. ஆனால் அதற்காகத் தமிழர்கள் இந்தியர்களாக ஆகிவிட முடியாது..

தமிழர்கள் மட்டுமல்லர் இந்தியாவில் இருக்கிற இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அல்லாத வேறு எந்த மொழித் தேசிய இனத்தினரும் இந்தியர்களாக ஆகிவிட முடியாது..

மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் மலையாளிகள் ஆகின்றனர்.. வங்காள மொழியினர் வங்காளிகள் ஆகின்றனர்..

தெலுங்கு மொழியினர் தெலுங்கர் ஆகின்றனர்..

பஞ்சாபிய மொழியினர் பஞ்சாபியர் ஆகின்றனர்..

அப்படியான வகையில் இந்தி மொழியினரே இந்தியராகின்றனர்..

எனவே, தமிழர்களை இந்தியக் குடிமகன் என்று இந்திய அரசியலில் சட்டத்தின் அடிப்படையில் எழுதுகிற அதேபோது தமிழர் என்று தேசிய இனத்தின் (நேசனாலிட்டி) வழிப் பதிவு செய்கிற வகையில் பிறப்பு, இறப்பு மற்றும் கல்விச் சான்றிதழ்கள் என அனைத்து இடங்களிலும் பதிந்திடும் நிலையை உருவாக்க வேண்டும்..

2

## தமிழ்நாட்டு இலச்சினையில் குமரி ஐயன் திருவள்ளுவர் சிலையையோ அல்லது திருக்குறள் பொத்தகத்தையோ இடம்பெறச் செய்ய வேண்டும்..

இக்கால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிற தமிழ்நாட்டு அரசின் இலச்சினை கடந்த 1947□இல் அன்றைய முதலமைச்சர் ஓமந்தூரார் அவர்களால் முன்மொழியப்பட்டு 1949 இல் இந்திய அரசால் ஏற்கப்பட்டு அறிவிக்கப்பட்டது..

அதில் திருவல்லிபுத்தூர் கோயில் கோபுரம் அமைக்கப்பட்டது.. அதன் கீழ் சத்யமேவே ஜெயத்தே என்று தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டிருந்தது.. மேற்புறத்தில் ஆங்கிலத்தில் கவர்மெண்ட் ஆப் மெட்ராஸ் □ எனப் பெயர் இருந்தது.. அதன் பின்னர் 1967 □இற்குப் பிறகே அண்ணா அவர்களால் கவர்ன்மென்ட் ஆப் மெட்ராஸ் என்பது தமிழ்நாடு அரசு என்றும் சத்தியமேவே ஜெயத்தே என்பது வாய்மையே வெல்லும் என்றும் தமிழில் மாற்றப்பட்டன..

பிற மொழி மாநிலங்களில் உருவாக்கப்பட்ட இலச்சினைகள் பல அந்தந்த மொழி மாநில அடையாளங்களைச் சொல்லுகிற படி அமைக்கப்பட்டிருக்கிறது.. கேரளத்தில் 1962 இல் அமைக்கப்பட்ட கேரள அரசு இலச்சினை யானைகளை இணைத்த தோற்றத்தை வெளிப்படுத்திக் காட்டி வருகிறது..

ஆனால் தமிழ்நாட்டின் இலச்சினையில்தான் இந்திய அரசின் கொடி அமைக்கப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.. வேறு எந்த மாநில இலச்சினைகளிலும் இந்திய அரசின் கொடி இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்..

இந்நிலையில் திருவில்லிபுத்தூர் கோயிலின் சின்னத்தைத் தமிழ்நாட்டை அடையாளப் படுத்துகிற சின்னமாக எண்ண முடியாது..
மதச்சார்பற்ற திருவள்ளுவர் அறநெறிக்குட்பட்ட வள்ளலாரின் சமயச்சார்பற்ற நீண்ட நெடிய வரலாற்று வழிபட்ட தமிழ்நாட்டைத் திருவில்லிபுத்தூர் கோயிலைக் காட்டிச் சுருக்குவது தமிழ்நாட்டின் மதிப்பையே குறைப்பது..

தமிழ்நாட்டிற்குரிய இலச்சினை அடையாளத்தைச் சமயம் சார்ந்த அடையாளமாகக் குறிப்பிடுவது மிகவும் தவறானது.. தமிழ்நாட்டின் பெருமைமிகு வரலாற்றையே மடை மாற்றுவதாகும்..







எனவே தமிழ் நாட்டிற்குரிய இலச்சினையில் தமிழர்களின் அறவுணர்வைக் காட்டும் திருவள்ளுவரின் உருவமோ அல்லது திருக்குறள் நூலின் அடையாளமோ அமைப்பதே சரியானதாகும்.

எனவே தமிழ்நாடு அரசு அதிலும் உடனடியாகக் கவனம் செலுத்தி மாற்றி அமைக்க வேண்டும்..




### 3
### தமிழ்நாடு நாள் விழாவைவும் தமிழ்நாட்டிற்கெனக் கொடியையும் தமிழ்நாடு அரசு அறிவிக்க வேண்டும்..

மிக நீண்ட நெடிய பல ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான அரசு சார்ந்த பெரும் நிலப்பரப்பாகத் தமிழ் கூறும் நல்லுலகம் என்கிற அளவில் தமிழ்நாடு அரசு உருவாக்கம் பெற்றிருந்த நிலையில்.. இறுதியாகப் பிரித்தானியருக்கு அடிமைப்பட்ட பின்னர் இந்திய அரசு உருவாக்கத்திற்குள் அடைக்கப்பட்டு விட்டது..

இந்திய அதிகார அரசுக்கு அடிமைப்பட்டுப்போன தமிழ்நாடு மீண்டும் தன்னைத் தமிழ்நாடு என்கிற அளவில் மாற்றிக் கொள்ளவே அரும்பாடு பட்டது.. தமிழ்நாட்டிற்கெனத் தனிக் கொடியை உருவாக்கவும், தமிழ்நாட்டிற்கான நாளாக ஒரு நாளை அமைத்துக் கொண்டு பெருவிழா நடத்தவும் வழியற்றுப் போனது..




தமிழ் ஆர்வலர்களின் அறிஞர்களின் பெரு முயற்சிகளுக்குப் பின்னர் சில அடையாளங்கள் பெறப்பட்டாலும் தமிழ்நாடு நாள் விழாவை அரசு விழாவாக, மக்கள் விழாவாகக் கொண்டாடுகிற ஓர் பேரெழுச்சி நாள் அறிவிக்கப்படவில்லை.

அத்தகைய ஒரு விழா நாளை அரசு அறிவிப்பதோடு கொண்டாடவும், தமிழ்நாட்டிற்கேன ஒரு கொடியை மக்கள்கொடியாக அறிவிக்கவும் வேண்டும்..

கர்நாடகமும் பல வட மாநிலங்களும் அவ்வாறு அறிவித்திருக்கிற பொழுது தமிழ்நாடு பின்தங்கி இருப்பது சரியற்றது..

இந்த மூன்று கோரிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மிக விரைவில் படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துகிறோம்..

*சுயமரியாதை* என்கிற தமிழர்களிடையே தன்மான உணர்ச்சி இருக்க வேண்டும் என்று சொன்னால் மேற் குறிக்கப்பட்டிருக்கிற இந்த மூன்று அடையாளங்களும் தமிழர்களின் தன்மான உணர்ச்சிகானவை என்பதை யாரைக் காட்டிலும் தமிழ்நாட்டு அரசினர் உணர முடியும்..

எனவே, இந்த ஆண்டுக்குள் தமிழ்நாடு அரசு தமிழர்களின் தன்மான உணர்ச்சிக்குரிய இந்த மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

இந்த மூன்று செயற்பாடுகளும் தமிழ்நாட்டரசால் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என அனைவரும் வலியுறுத்துவோம்.

■ பொழிலன்

---

# திண்டுக்கல்லில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா

20 ஆண்டுகளாகத் திறக்க முடியாமல் பல்வேறு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டிருந்த நிலையில்.. திருவள்ளுவருக்குத் திண்டுக்கல்லில் சிலை திறக்க முடியாமல் இருந்தது.. மாவட்டத்தில் அதிகாரம் செலுத்தி வந்த அதிகாரிகள் மட்டுமின்றி அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் எந்தப் பொது இடத்தையும் ஒதுக்காமல் இடர் செய்து கொண்டே வந்தனர்..

இறுதியாக மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே திறப்பு விழா நடைபெற்றது..

திண்டுக்கல்லில் உள்ள புனித லூர்து அன்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அடைக்கல அன்னை அவையைச் சார்ந்த உறுப்பினர்கள் அருள் உள்ளத்தோடு அளித்த இடத்தில் சிறப்போடு திருவள்ளுவர் சிலை கடந்த ஏப்பிரல் 15 ஆம் நாள் நிறுவப்பட்டது.. திண்டுக்கல் திருவள்ளுவர் இலக்கிய பேரவையின் சார்பில் ஐயா கழராம்பன் அவர்களின் முழு முயற்சியால் எழுச்சிமிகு விழா நடத்தப்பட்டு தமிழ்நாட்டு அமைச்சர் ஐ பெரியசாமி அவர்களால் திறக்கப்பட்டது. குமரகுருபர அடிகளார், அருள் அன்னை மரிய பிலோமி, பவுலின் ஆக்னஸ், கோவை கு இராமகிருட்டிணன், பொழிலன், நாகை திருவள்ளுவன் கணியன் அமுதன், திரைப்படஇயக்குநர் சேகர் உள்ளிட்ட பலரும் பங்கேற்று உரையாற்றினர்..

துரை சம்பத், திருக்குறள் செல்வம், பெரியார் நம்பி, குழந்தை தெரசு, தமிழ் இராசேந்திரன், பாபுலால் உள்ளிட்ட எண்ணற்றோர் பெரும் துணை நின்று நிகழ்ச்சியை நடத்திச் சிறப்பித்தனர்..
வெற்றி அறக்கட்டளை நிறுவனர் திரு வசந்தி கணேசன் அவர்கள் தன் நிலத்தைத் திருவள்ளுவர் நூலகம் அமைத்து பொதுநிலைக்குத் தருவதாக மேடையில் அறிவித்து வரவேற்புரை ஆற்றினார்..

திருக்குறள் ஆர்வலர்கள் அறிஞர்கள் தமிழன்பர்கள் பள்ளிக்கூட ஆசிரியர்கள் மாணவர்கள் மாணவியர்கள் என அனைவரும் பெரும் திரளோடு நிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்ந்தனர்..





■ பொழிலன்

அரசியல் அறியவேண்டும் 2

# திராவிடம்.. திராவிடர்..

தமிழுக்கு நீண்ட நெடுங்கால வளர்ச்சி உண்டு.

நிலவுடைமை அரசுகளாகப் பிரிவுற்றிருந்ததாலும், ஆரிய சமசுக்கிருத ஊடுருவலாலும், சமண புத்தத்தின்வழி பிராகிருதமும், பாலியும் நுழைந்ததாலும், பிற நாட்டினரின் வந்தேறி ஆட்சியால் அரபு, உருது, ஆங்கிலம் உள்ளிட்ட பலமொழிகள் கலப்புற்றதாலும் தமிழ் பெருமளவில் சிதைக்கப் பெற்றது.

தமிழ் □ அரசு மொழியாக இருந்ததைக் காட்டிலும், மக்கள் வாழ்க்கை மொழியாகவே இருந்து வந்திருக்கிறது.

பழங்காலத்தில் தமிழே வீரர்கால மொழியாக, நிலவுடைமை அரசுகளின் மொழியாக இருந்திருக்கிறது. ஆனால் பல்லவர் காலம், தொடந்து பிற்காலச் சோழர்கள் காலம் முதல் விசயநகரக் காலம், மராட்டியர் காலம் எனத் தொடர்ந்து தமிழை அரசு மொழியாக ஏற்கிற முதன்மை குறைக்கப்பட்டுச் பிராகிருதமும், சமசுக்கிருதமும், தெலுங்கும் பிறவுமே அரசு மொழிகளாக ஆளுமை செய்தன.

எனவே பல காலங்களில், மக்கள் வாழ்வியல் மொழியாக மட்டுமே தமிழ் இருக்க நேர்ந்தது.

அரசின் நடைமுறை வழக்கில் அல்லாமல் தமிழ் வாழ்வியல் மொழியில் கலப்பு இல்லாமலேயே இருந்து வந்தது. அரசு நடைமுறைவழிச் சொற்கள் சமசுக்கிருத வயமாயின; தொடர்ந்து அரபுக் கலப்பும் பின் ஆங்கிலவயமுமாயின,

சமயச் சார்பு நிலையில் புத்த சமணப் பெருக்கம் தோன்றியது. அதன்வழி வடபால் தமிழிய(திராவிட) மொழியான பிராகிருதமும், அதன் ஒரு கூறாக இருந்த பாலிமொழியின் கலப்பும் தமிழில் ஏற்பட்டன.

தொடர்ந்து புத்த, சமணத்தை மறுத்துத் தமிழகத்தில் எழுந்த சிவனிய □ மாலிய மதப் புகைச்சல்களைத் தன்வயப்படுத்திக்கொண்ட வைதிகம், சமசுக்கிருதச் சார்பின்றிச் சமய வழக்காறுகள் இல்லை என்பன போலான நிலையை உருவாக்கி அதன்வழி சமசுக்கிருதம் தேவமொழி என்றும், சமய வழிபாட்டு மொழி என்றுமாய்ப் பரப்பல் செய்தது.

ஆக, தமிழ்மொழி மீதான கலப்புகள் இயல்பாக ஏற்பட்டவையல்ல. வன்மையான பிற வந்தேறிய ஆளுமையர்களால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது.

இன்றைய நிலையில் வரலாறும், வாழ்வியலும் இந்திய வயமாக்கப்பட்டுப் பொய்ம்மையாகத் திரித்துப் பதிவாக்கப்பட்டுவருகின்றன.

எனவே தமிழிய வரலாறு என்பதையும், தமிழ்மொழி வரலாறு என்பதையும் இத்தியவய வரலாற்றிலிருந்து விடுதலைசெய்து விளக்கப்படுத்த வேண்டியுள்ளது.

இதே தன்மையிலேயே பழந்தமிழர்கள் பரவியிருந்த நாவலந் தீவு எனும் விரிந்த பரப்பில் ஆங்காங்கே வந்தேறிய ஆட்சியால் சிதைந்த தமிழ் மொழியால் திரிபுற்றுப் பிற மொழிகள் உருவெடுத்தன..

நன்னன் என்னும் பேரரசன் ஆண்ட கொங்கணப் பகுதி திரிபுற்றுத் துளுவாகவும் கொங்கணியாகவும் மாறிவிட்டது போல் பழந்தமிழே தெலுங்கும் கன்னடமும் மலையாளமுமாக மாறிப்போயின. தென் கேரளத்தில் 17ஆம் நூற்றாண்டு வரை அரசு அலுவல் மொழியாகவும் தமிழே இருந்தது என்பது அறியத்தக்கது.

ஆக, பிராகிருத, சமசுக்கிருத மொழி கலப்பாலேயே தமிழ் திரிந்து தமிழியச் சார்பில் பல மொழிகள் உருவாயின.

அவ்வகைத் திரிபு மொழிகளின் மூலமொழி தமிழே என்று முதன் முதலில் கண்டறிந்து உலகிற்கு அறிவித்தவர் **கால்டுவெல்.**

சமசுக்கிருத தொடர்புடையனவே இந்தியாவில் உள்ள மொழிகள் என்பதை மறுத்துத் தமிழியத் தொடர்புடைய மொழிகள் பல உண்டு என்று அவர் கண்டறிந்தார்.

அவர் ஆய்வு செய்த காலத்தில் தொல்காப்பியம் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்கள் பல கண்டறியப்படவில்லை என்பதை அறிய வேண்டும். எனவே, சில குறைபாடுகள் அவரின் ஆய்வில் இருந்தன. திராவிடம் என ஒரு மொழி இருந்ததாக அவர் கருதினார் அதிலிருந்தே தமிழ் உள்ளிட்ட பிற மொழிகள் தோன்றியதாக அவர் எண்ணினார்.

அவருக்குப் பிறகு **மாகறல் கார்த்திகேயனார், தேவநேயப் பாவாணர்** என மொழியியல் அறிஞர்களின் ஆய்வுகள் பல விளக்கங்களைத் தந்தன.

அவர்களெல்லாம் தமிழியத் தொடர்பு கொண்ட திரிபு மொழிகளைத் **திராவிட மொழிகள்** என்றும், அவற்றை **வடபால் திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், தென் திராவிட மொழிகள்** என வகைப்படுத்திக் காட்டினர். ஏறத்தாழ 45 மொழிகளை அவ்வகைத் தொடர்புடையன என விளக்கப்படுத்தி நிறுவினர்.

அந்த மொழிகளுக்கெல்லாம் மூல மொழி தமிழ்தான் என்பதை மொழியியல் வழி நிறுவினர். இக்கால் சொல்லாய்வு அறிஞர் **அருளியார்** உள்ளிட்டுப் பலர் அவை குறித்து விரிவாக ஆய்வுகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

**எமினோ, பர்ரோ, நோம் சோம்ஸ்கி** உள்ளிட்டு உலகின் எண்ணற்ற மொழியியல் ஆய்வறிஞர்கள் அவற்றை ஏற்று நிறுவி வந்திருக்கின்றனர்..

ஆக, ஆரியத் தொடர்புடையது அல்லாத தமிழை அடியாகக் கொண்டதே அத்தகைய தமிழிய (திராவிட) மொழிக் குடும்பம்.

இக்கருத்து மொழியியல் அறிஞர்களிடையே தமிழ் ஆர்வலர்களிடையே பரவிய அளவில் தமிழ், திராவிட மொழிகள் சார்ந்த வெகு மக்களிடையே பரவிடவில்லை.

அதாவது தமிழில் இருந்து பிறந்தவைதாம் திரவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு உள்ளிட்ட 45க்கும் மேலான மொழிகள் என்பதை அவர்கள் தெரிந்திடவில்லை..

அவ்வாறு தெரிய வைக்கிற வாய்ப்பு தமிழ்நாட்டரசுகளுக்குக் கடந்த காலங்களில் ஏற்படவில்லை, ஏற்படுத்திக்கொள்ளவுமில்லை.

ஏன் ஏனெனில் தமிழ்நாட்டு அரசளவில் அதை உணர வைப்பதற்கே **பாவாணரும்** அவரின் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட **பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தென்மொழி இயக்கமும்** அரும்பாடுபட வேண்டி இருந்தது..

பாவாணரின் கண்டறிவை **வையாபுரி**(ப்பிள்ளை), **தெ பொ மீ** போன்ற தமிழ் அறிஞர்களும், **பொள்ளாச்சி மகாலிங்கம்** போன்ற தமிழ்நாட்டுப் பெரு முதலாளிகளும் ஏற்கவில்லை..

அவர்களையெல்லாம் சார்ந்தே தமிழ்நாட்டு அரசினர் இயங்கினர்.. உலகத் தமிழ் மாநாடுகளில் வையாபுரி, தெ பொ மீ கருத்தொட்டியவர்களே பெரிதும் பங்கேற்க வைக்கப்பட்டனர்.. பாவாணரும், பாவலரேறுவும் அவர்கள் கருத்தொட்டியவர்களும் புறக்கணிக்கப்பட்டனர். பாவாணரும் பாவலரேறுவும் பல வகையில் சிறுமைப்படுத்தப்பட்டு அடக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டனர்.

பாவாணர் கருத்தைப் பரப்பல் செய்து இயக்கப்படுத்தியவர்களாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் உள்ளிட்ட தென்மொழியரும், உலகத் தமிழ்க் கழகத்தவர்கள் எனச் சிலருமே இருந்தனர்..

அவ்வகை மொழி இயல் கருத்துகளைப் பெரியாரிடம் பாவாணரும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் நேரில் விளக்கப்படுத்திய நிலையில் பிற்காலங்களில் ஒப்புக்கொண்டவராய்ப் பெரியார் இருந்தார். பாவாணருக்குத் **திராவிட மொழியியல் ஞாயிறு** எனப் பட்டமளித்துச் சிறப்பித்ததுடன் பாவாணரின் மொழியியல் கருத்துகளை அவரின் எளிய மக்கள் வழக்கில் பல நிகழ்ச்சிகளில் பேசவும் செய்தார்.

எனவே, பாவாணரின் மொழியியல் கருத்துகள் காட்டிய விளக்கங்கள் வழி நாம் அறிய வேண்டுவது முகமையானது. திராவிடம் என்பது ஏதோ தனித்த மொழி அன்று. திராவிடம் என்றொரு மொழி இருந்திடவும் இல்லை என அறியலாம்.

திராவிடம் என்பது தமிழில் இருந்து பிரிந்த அல்லது தமிழை அடித்தளமாகக் கொண்டு பிற மொழிக் கலப்பால் உருவான மொழிகளைக் குறிக்கவே பயன்படுத்தப்படுத்தப்பட்ட சொல்லாக அமைந்தது.

அந்த மொழிகள் ஆரிய மூலத்திலிருந்து வந்தன அல்ல. ஆரிய மொழிக் குடும்பம், ஆரிய மொழிக் குடும்பத்தினர் என்று அடையாளப்படுத்தப்படாமல் திரவிடக் குடும்பம், திரவிட மொழிக் குடும்பத்தினர் எனப் பாவாணர் அவர்கள் விளக்கப்படுத்தினார்..

**தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும்** என்பது பாவாணர் அவர்களின் மொழியியல் ஆய்வின் முழு வெளிப்பாடாக இருந்தது..

இக் கருத்தை வலியுறுத்தி நூற்றுக்கணக்கான கட்டுரைகளைப் பாவாணர் அவர்கள் எழுதியுள்ளார்..

அவரின் **திரவிடத் தாய், தமிழ் வரலாறு** ஆகிய நூல்களில் மிக விரிவாகப் பதிவு செய்திருக்கிறார்..

> "தென்னிந்திய மொழிக்குடும்பத்தைக் கால்டுவெல் கண்காணியார் முதன் முதலாக ஆராய்ந்ததினால், தமிழையும் அதனொடு தொடர்புள்ள பிறமொழிகளையும் வேறுபடுத்தாது, திரவிடம் என்னும் ஒரே பெயராற் குறித்தார். ஆயின், இன்று தெலுங்கு கன்னட மலையான நாடுகள் வெவ்வேறு பிரிந்து போனமையாலும், தமிழ் ஒன்றே ஆரியத்தை எதிர்த்துத் தன் தூய்மையைப் போற்றிக் கொள்ளும் ஆற்றல் பெற்றுள்ளமையாலும், வடசொற்கள் சேரச் சேரத் தெலுங்கு கன்னட மலையாளத்திற்கும் தீரத்திரத் தமிழுக்கும் உயர்வு ஏற்படுவதனாலும், இந்தியும் வடமொழியும் பற்றிய கொள்கையில் தமிழர்க்கும் அவர்தம் இனமொழியாளர்க்கும் நேர்மாறான கருத்துண்மையாலும், தெலுங்கு கன்னடம் முதலிய இனமொழிகளெல் லாம் மீளத் தமிழொடு சேர முடியாவளவு ஆரியவண்ணமாய் மாறி விட்டமையாலும், அதனால் இனமொழிகளையும் புறக்கணிக்கும் நிலை தமிழுக்கு ஏற்பட்டு விட்டதனாலும், **தமிழைத் தமிழ் என்றும், அதன் இனமொழிகளையே திரவிடம் என்றும்**, பிரித்துக் கூறல் வேண்டும்."

என்று (தமிழர் வரலாறு □ பக்கம் 28 □ நூலுள்) விளக்கப்படுத்துவார் பாவாணர்.

மேலும் திராவிடம் எனும் சொல் முதலில் தமிழ் என்னும் பொருளிலேயே வழங்கியதாகப் பல சான்றுகளைக் காட்டி விளக்குவார் பாவாணர்.

தமிழ் எனும் சொல்லை வெளிநாடுகளில் பிற மொழியினர் எவ்வாறு கூறிவந்தனர் என்ற விரிந்த ஒரு பட்டியலையும் தந்திருப்பார்..

அவைமட்டுமன்றித் திராவிடம் எனும் சொல் குறித்து **ஞானப்பிரகாசரும், கனகசபையும், கந்தையாவும், தாமோதரரும்** உள்ளிட்ட அறிஞர்கள் பலரும் என்னவெல்லாம் கருத்து கொண்ருந்தனர் எனப் பாவாணர் விளக்குவார்.

நாட்டுப் பெயர்களும் மொழிப்பெயர்களும் பண்டைக்காலத்தில் `அம்` ஈறு பெற்றுத் தமிழில் வழங்கியதை நோக்கும் போது தமிழ் என்னும் சொல்லும் சிறுபான்மைத் தமிழம் என்று வழங்கியதாகக் கருத இடம் ஏற்படுகின்றது.. தமிழம் , த்ரமிலம்), த்ரமிளம்), த்ரமிடம்), த்ரவிடம்) என்னும் வடிவங்களை முறையே நோக்கின் தமிழ் என்பதன் திரிபே திரவிடம் என்பது புலனாம் – என்றெல்லாம் விரிவுபட விளக்குவார்..

மொழியியல் தன்மையில் பாவாணர் இக்கருத்தை வெளிப்படுத்தியிருப்பதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பே இனவியல் கருத்தில் **அயோத்திதாசப் பண்டிதர்** திராவிடக் கருத்தை விளக்கி இருப்பதும் கவனிக்கத்தக்கது..

> சாதிபேதமற்ற திராவிடர்கள் யாவரும் சீர்பெறுவார்களென்பது சத்தியம். ஆதலின் நமதரிய திராவிட சோதிரர்கள் யாவரும் கருணைதங்கிய பிரிட்டிஷ் ராஜவிசுவாசத்தை நாடுங்கள். சாதிபேதமற்ற திராவிட மகாஜன சங்கக்கூட்டத்திற் கூடுங்கள். நீதிமார்க்கத்தையே என்றும் நாடுங்கள். ஆதிபரனையே என்றும் பாடுங்கள், பாடுங்கள் என்று வேண்டுகிறோம். சனவரி 26, 1910
>
> பூர்வக் குடிகளாம் திராவிடர்களைத் தாழ்த்தி நாசமடையச் செய்வதற்கே சாதிபேதத்தை உண்டுசெய்துண்டவர்களாதலின் அவர்கள் சொந்த பூமிகளை வைத்துப் பயிர்செய்யவும் சுகம் பெற்று வாழ்கவும் மனம் பொறார்களென்பது திண்ணம் மே 18, 1910
>
> முத்தமிழுக்குத் திராவிடமென்னும் பொதுப்பெயர் வழங்கலாயிற்றேயன்றி வேறென்றாம். இவற்றை நூதனமத வித்வான்களெவரேனும் மறுப்பரேல் பூர்வ நூலாதாரத்துடன் விளக்கக் காத்துள்ளோமாக. மார்ச் 4, 1914
>
> வடமொழி தென்மொழியென்னும் இருவகுப்பில் தென்மொழி யாம் திராவிடம், தமிழ் என்னும் இருமொழிகளும் ஒருபாஷைக்குரிய பெயர்களேயாம். அம்மொழிகள் தோன்றியவற்றிற்கு மூலகாரணங்கள் யாதெனில், அவ்வட்சரங்களுள் நஞ்செழுத்தாம் விடவட்சரங்களும், அமுதெழுத்தாம் இனியவட்சரங்களுள்ளது கண்டு நஞ்செழுத்தால் தீராவிட மென்றும், அமுதெழுத்தால் தமிழென்றும் இருபெயர்களுண்டாயிற்று
>
> தீராவிடமென்னு மொழியே குறுக்கல் விகாரத்தால் திராவிடம் திராவிடமென வழங்கலாயிற்று.
>
> திராவிடமென்பதே தமிழென்பதற்குச் சூத்திர ஆதாரங்கள் இருப்பதுடன் வடநாட்டோரும் சிங்களத் தேசத்தாருந் தமிழைத் திராவிடபாஷையென்றும், தமிழ் பாஷைக்குரியோரைத் திராவிடர்களென்றும் வழங்கி வருவதை நாளது வரையிற் காணலாம். இத்தேசப்பெயரையும் வேதாகம புராணங்களையும் கடவுளர்களையும் புரட்ட ஆரம்பித்துக் கொண்டவர்கள் திராவிடமென்னும் பாஷையையும் புரட்டப்பார்க்கின்றார்கள். டிசம்பர் 4, 1912

என்றெல்லாம் பல இடங்களில் அயோத்திதாசப் பண்டிதர் விளக்குவார்.

திராவிட மொழி என்று ஒரு மொழி இருந்தது என்றும், திராவிட மொழியிலிருந்துதான் தமிழ் உள்ளிட்ட சில மொழிகள் உருக்கொண்டன என்றும் தமிழ்த் தேசப் பார்வையாளர்கள் சிலர்கூடக் கடந்த காலங்களில் கூறிவந்தது, ஆழ்ந்த இயங்கியல் பார்வையில்லா முடிவுகளே.

திராவிட மொழியிலிருந்தே தமிழும், தெலுங்கும், கன்னடமும், மலையாளமும், துளுவும் □ பிறவும் பிறந்தன என்பது இயங்கியல் வரலாற்றைத் தலைகீழாய்ப் படித்திடுவதே ஆகும்.

தமிழையே □ ஆரியத்தினரான சமசுக்கிருதத்தினர் □ 'திராவிடம்' எனத் திரித்துக் கூறினர்.

மிகப் பழங்காலந்தொட்டே நம் தமிழ் மொழிக்குத் தமிழ் எனும் சொல் வழக்கு இருந்தது. தமிழ் என்கிற சொல்லே பழைய இலக்கியங்களிலும் பயிலப்பட்டு வந்திருக்கிறது.

'தமிழ் கூறும் நல்லுலகு, 'தமிழ்' என்கிளவி என்ற சொற்றொடர்களில் எல்லாம் பதிவாகியுள்ள 'தமிழ்' □ என்பதே தொல்காப்பியப் பாயிரத்திலும், எழுத்ததிகாரத்திலும் இருப்பதைக் காணலாம்.

ஆனால்□ பிற்காலத்தில் அத் தமிழ் எனும் சொல்லை ஆரியத்தினரின் சமசுக்கிருதம் தன் வழக்கப்படி முன்திரித்து வழங்கியிருக்கிறது. பவழம் என்பதைப் 'ப்ரவாளம்' என்றும், 'படி' என்பதைப் 'ப்ரதி' என்றும் வழங்கியதுபோல் தமிழ் என்பதை த்ரமிள் □ த்ரமிளம் □ திரவிடம் என்பதாகவே அழைக்கலாயினர்.

> திரமிளா □ என்பது மொழிகள் என்றும், த்ரவிடா□ என்பது அம்மொழியையும், அம்மொழி வழங்கு நாட்டையும், த்ரமிடா மொழி இலக்கண வழக்காற்றுப் பள்ளியைக் குறித்ததாயும்,
>
> த்ரமிட்டா □ ஒரு நாக அரசனைக் குறிப்பதாயுமே மானியர் வில்லியம்சு தாம் தொகுத்த சமசுக்கிருத ஆங்கில அகராதியில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தவகையில் மேலும் பலரின் ஆய்வுகளையும் ஒப்பிட்டு அறியவேண்டுவது கட்டாயத் தேவைக்குரியது. அவை குறித்தெல்லாம் அடுத்த இதழில் பார்ப்போம்..

...தொடரும்


கன்னியாகுமரி ஐயன் திருவள்ளுவர் சிலைக்குக்
குமரிக் கடற்கரையிலிருந்து தனியே பாலம்
அமைத்திட வலியுறுத்திப் பெருந்திரள் முறையீடு..

திபி 2054 மேழம் 26 ( மே 9, 2023) செவ்வாய்க்கிழமை, மாலை நான்கு மணி முதல் ஏழு மணி வரை.. இடம்: சென்னை□ வள்ளுவர் கோட்டம் அருகில்.

# ஆதிதிராவிடர் நலத்துறைப் பள்ளிகளை வெற்றியோடு நடத்துவது எப்படி?

ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளை வெற்றியோடு நடத்துவது எப்படி என்ற கருத்தரங்கம் சென்னை இக்சா மையம் எழும்பூரில் ஏப்பிரல் 13 அன்று நடைபெற்றது இக்கருத்தரங்கை அறிவுச் சமூகம் தோழர் தமிழ் முதல்வன் ஒருங்கிணைத்திருந்தார்

அதில் மக்கள் தமிழகம் கட்சி சார்பில் தோழர் புகழரசு கலந்து கொண்டு பேசியதன் சுருக்கம்,,,

தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் அமைப்பில் நாங்கள் இயங்கிக் கொண்டு வருகிறோம். தமிழே கல்வி மொழி, தமிழ் மொழி படித்தோர்க்கே வேலை, தமிழ்நாட்டிற்கு கல்வி உரிமை என்னும் முதன்மை முழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றோம். இது முதன்மை முழக்கம் மட்டுமே இன்னும் பல்வேறு முழக்கங்கள் இருக்கின்றன.

அரசுப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பள்ளியில் அரசு துறையில் பணிபுரியும் ஊழியர்களின் பிள்ளைகளை அரசு பள்ளியில் எத்தனை பேர் சேர்த்துள்ளோம் இதுவரை.. ?

அது மட்டும் இல்லாமல் நான் ஒரு பட்டதாரி ஆசிரியர் என்ற அடிப்படையில் பல்வேறு மாணவர்களைப் பல்வேறு தளங்களில் பள்ளிகளில் இரவு பள்ளிகளில் மாணவர்களை எங்கெல்லாம் சந்திக்க வாய்ப்பு இருக்கிறதோ அவ்விடத்தில் எல்லாம் மாணவர்களை நான் சந்தித்திருக்கிறேன். அந்த அடிப்படையில் ஆதிதிராவிடர் நலப் பள்ளியின் சூழலை நான் நன்கு அறிந்தவன் சான்றானச் சொல்லப் போனால் இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி வட்டம் கீழ் வீதி சிற்றூரில் அமைந்துள்ள ஆதி திராவிடர் தொடக்கப்பள்ளி கடந்த ஓராண்டிற்கு முன் பழுதடைந்ததின் அடிப்படையில் அவை முழுவதுமாக இடிக்கப்பட்டு பள்ளி மாணவர்கள் படிப்பதற்காக ஊரில் உள்ள நல்ல உள்ளம் படைத்த ஒருவர் தன்னுடைய வீட்டை இலவயமாக வழங்கினார்.

இன்று வரை அந்தப் பள்ளி கட்டி முடிக்கப்படவில்லை. அந்த மாணவர்களுக்கான அடிப்படைத் தேவைகளான கழிப்பிடம் வசதியும் செய்து தரப்படவில்லை. மேலும் அப் பள்ளி மாணவர்களுக்கு இரண்டு ஆசிரியர்கள் தேவை. பள்ளிக்கு என்றே அவ்விரண்டு ஆசிரியர்களும் இல்லாத ஒரு சூழல். இதனுடைய ஒரு சூழலாக மற்றொரு ஆதிதிராவிடர் தொடக்கப்பள்ளியில் இருந்து மாறுதலாகத் தற்காலிகமாக ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டார். இவ்வாசிரியரின் வருகையால் அவ்வா ஆசிரியர் ஏற்கனவே பணியில் புரிந்து இருந்த பணி புரிந்திருந்த பள்ளியில் அங்கு ஆசிரியர் குறைபாடு ஏற்பட்டது. இதையெல்லாம் கருத்தில் கொள்ளாத ஆதிதிராவிடர் நலப் பள்ளி நிர்வாகம் ஆசிரியர்கள் சங்க ஊழியர்கள் எனப் பல்வேறு பேர் இருந்தனர். இதையொட்டி அப்பள்ளியில் பயின்று வருகின்ற மாணவர்களின் பெற்றோர்கள் மூன்று முறை தங்களின் குழந்தைகளை அப்பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்தி வைத்தனர். போராட்டத்தின் அடிப்படையில், ஆனால் இன்று வரை அதில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இதேபோன்று அரக்கோணம் நகரத்தில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் பெண்கள் மற்றும் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியும் அமைந்துள்ளது. அதனுடைய கட்டமைப்புகள் இல்லாத ஒரு சூழல்.

இதை நான் எப்படி பார்க்கின்றேன் என்றால் ஆதிதிராவிடர் பள்ளி ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளைப் பள்ளிக்கல்வித்துறையுடன் இணைக்கும் அரசின் அறிவிப்பிற்கு ஆதி திராவிட நலத்துறையில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் எஸ்சி எஸ்டி கூட்டமைப்பு போன்ற அமைப்புகள் இதற்குக் கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இவ் அமைப்புகள் அனைத்தும் இவர்கள் ஆசிரியர் அமைப்புகளாக இருந்தாலும் இவர்கள் அனைவரும் ஆசிரியர்கள் நலன் சார்ந்தும் அரசு ஊழியர்களின் நலம் சார்ந்தும் போராட்டத்திற்கு முன் வருகிறார்கள். ஆனால் மாணவர்களின் உண்மையான சிக்கல்களை ஒட்டி இவர்கள் பேசுவதற்கு அணியமில்லை. இவர்களுடைய ஆசிரியர் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி, ஆசிரியர் அமைப்பாக இருந்தாலும் சரி, அரசு ஊழியர் அமைப்பாக இருந்தாலும் சரி இவர்கள் மாணவர்கள் நலனின் அக்கறை செலவு செலுத்துவதற்கும் அவர்களின் வளர்ச்சிக்கும் அவர்களின் முன்னேற்றத்திற்கும் இவ்வரசை எதிர்த்துக் கேட்பதற்கும் போராடுவதற்கும் முன்னிற்பது கிடையாது.

இதை எதிலிருந்து தொடங்கலாம் என்றால் மேலே குறிப்பிட்ட ஊழியர்களின் குழந்தைகளை எத்தனை பேர் அரசுப் பள்ளிகளில் சேர்த்திருக்கிறார்கள் குறிப்பாக இந்தப் பிரச்சனையை ஒட்டிப் பார்க்கும் பொழுது ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கக்கூடிய பள்ளிகளில் ஆதிதிராவிட நலத்துறையில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத ஊழியர்களின் குழந்தைகளை எத்தனைப் பேர் அந்தப் பள்ளியில் சேர்த்திருக்கிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது ஒரு செய்தி. மற்றொரு செய்தி, ஆதிதிராவிட நலத்துறை பள்ளியின் கீழ் பள்ளிகள் தொடங்கப்பட்ட காலம் என்பது காலத்தின் சூழலால் அன்று ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வியைப் பெற்று தருவதற்காகத் தொடங்கப்பட்ட தருணம். அந்தக் காலக்கட்டம் சரியான ஒரு தருணம். அதனுடைய வளர்ச்சியும் அதனுடைய முயற்சியும் வெற்றியைத் தந்திருக்கிறது. அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் தற்பொழுது பள்ளிகள் என்பது எப்படி? இன்று பணத்திற்கான கல்வி முறை ஆக்கப்பட்டு இருக்கிறதோ அது போன்று நம்முடைய தமிழக அரசின் கீழ் இயங்கக்கூடிய பள்ளிகள் தமிழக அரசின் அடிப்படையில் உதவி பெற்று பல்வேறு நலத்துறையின் கீழ் இயங்கக்கூடிய பள்ளிகள், அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகள் எனப் பல்வேறு பள்ளி வகைப்பாடுகள் இருக்கின்றன. இவை அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கக்கூடிய பள்ளிகளாக மாற்றுவதற்குத் தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கக்கூடிய பள்ளிகளில் பணிபுரியக்கூடிய ஆசிரியர்கள் ஆசிரியர் அல்லாத ஊழியர்களின் அவர்களின் பணியில் ஏற்படக்கூடிய பணி மூப்புகள், பணி உயர்வுகள், ஊதிய உயர்வு போன்ற பல்வேறு சிக்கல்கள் இருக்கும். ஆனால், பிள்ளைகளை அரசுப்பொதுப் பள்ளிகளில் சேர்ப்பதே சரி..

அவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நாம் அனைவரும் சேர்ந்து பேசி இப்பள்ளிகளைப் பள்ளிக்கல்வித்துறையின் கீழ்க் கொண்டு வந்துவிட்டு, அவற்றில் என்னென்ன தேவை எனக் கோரிக்கைகளை முன் வைக்கலாம். அவை அனைத்தும் சட்டமாக்கப்பட வேண்டும் என்று கேட்கலாம் போராடலாம் அது நிறைவேறச் செய்யலாம் அதற்காக நாம் அனைவரும் சிந்திப்போம்.

---

## ஆர் எஸ் எஸ் பேரணி

**கா**ந்தியைக் கொன்ற, காமராசரை உயிரோடு எரித்துக் கொலை செய்ய முயற்சி செய்த, மூன்று முறைத் தடை செய்யப்பட்ட, இந்துத்துவ,மதவெறி பயங்கரவாத ஆர் எஸ் எஸ். தமிழ்நாட்டில் பேரணி நடத்த அனுமதி வழங்கியது உச்ச நீதிமன்றம். அந்த வகையில் ஏப்ரல் 16ஆம் நாள் தமிழ்நாடு முழுவதும் 45 இடங்களில் ஆர் எஸ் எஸ் பேரணி நடத்தியது.



தமிழ்நாட்டின் எந்த ஒரு வாழ்வாதாரப் பிரச்சனையிலும். அக்கறை காட்டாத, நமது தாய் மொழி தமிழ்க் கல்விக்காக, வழிபாட்டிற்காகப் ப் போராடாது தமிழ் மொழியைத் தவிர்த்து. சமஸ்கிருதத்திலேயே முழக்கங்கள், பாடல்கள் சுலோகங்கள் என எல்லாமும் செய்யும் இவர்கள் தமிழ்நாட்டில் பேரணி நடத்திட வேண்டுமென முனைப்புக் காட்டுவது ஏன்? தமிழ்நாட்டில் அரசியல் ரீதியாகத் தடம் பதிக்க முடியாதப் பாரதிய சனதாக் கட்சி. பல்வேறு தளங்களில் தமிழ்நாட்டைக் குறிவைத்து வேலை செய்கிறது. அதில் ஒன்றுதான் நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்திப் பேரணி என வெளிப்பூச்சுடன் இந்துத்துவ நச்சுக் கருத்துகளை இளைஞர்களிடம் விதைக்க இது போன்ற பேரணிகளைத் திட்டமிட்டு நடத்துகிறது. அகண்ட பாரதம் இராமராச்சியம் என இவர்கள் போடும்முழக்கம் என்பது தேசிய இனங்களின் மொழி பண்பாட்டு உரிமைகளைக் காவு கொடுக்கும் செயலே என்பதை உணர்ந்து, தேர்தல் அரசியல் கட்சிகள் மட்டுமல்லாமல் அவர்கள் பேரணி நடத்தியப் பகுதிகளில் உள்ள பெரியாரிய, தமிழ்த் தேசிய, மார்க்சிய, அம்பேத்கரிய இயக்கங்கள் ஒன்றிணைந்து மதவெறி சக்திகளைத் தமிழ்நாட்டில் தடம் பதிக்க விடாமல், அவர்களின் உண்மை முகத்தை மக்களிடம் அம்பலப்படுத்த பெருமளவில் பரப்பல்களை வெகுமக்களிடம் எடுத்துச் செல்ல உறுதியேற்க வேண்டும். இந்த அழிவுச் சக்திகளிடமிருந்து தமிழ்நாட்டையும், தமிழக மக்களையும் மீட்கும் பொறுப்பு தமிழரின் தலையாயக் கடமையாகும்.

**பேரணி நடத்திய ஊர்களின் விளக்கம் பின்வருமாறு:□**

*சென்னை மாவட்டம் □ கொரட்டூர்*
*திருவள்ளூர் மாவட்டம் □ திருவள்ளூர்*
*இராணிப்பேட்டை மாவட்டம் □ அரக்கோணம்*
*செங்கல்பட்டு மாவட்டம் □ செங்கல்பட்டு, ஊரப்பாக்கம்*
*காஞ்சிபுரம் மாவட்டம் □ காஞ்சிபுரம்*
*திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை, ஆரணி*
*வேலூர் மாவட்டம் □ வேலூர், ஆம்பூர்*
*தகடூர் மாவட்டம் □ தர்மபுரி*
*கருமலை(கிருட்டிணகிரி) மாவட்டம் □ ஓசூர்*
*சேலம் மாவட்டம் □ சேலம் ஆத்தூர்*
*நாமக்கல் மாவட்டம் □ நாமக்கல்*
*நீலமலை மாவட்டம் □ நீலமலை, கூடலூர்*
*கோவை மாவட்டம் □ கோயம்புத்தூர், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம்*
*ஈரோடு மாவட்டம் □ கோபி செட்டிப்பாளையம்*
*திருப்பூர் மாவட்டம் □ பல்லடம், மூலனூர்*
*விழுப்புரம் மாவட்டம் □ விழுப்புரம்*
*அரியலூர் மாவட்டம் □ அரியலூர்*
*கரூர் மாவட்டம் □ கரூர்*
*திருச்சி மாவட்டம் □ திருச்சி*
*திண்டுக்கல் மாவட்டம் □ பழனி*
*தஞ்சை மாவட்டம் □ கும்பகோணம், பட்டுக்கோட்டை*
*புதுக்கோட்டை மாவட்டம் □அறந்தாங்கி, கந்தர்வக்கோட்டை*
*சிவகங்கை மாவட்டம் □ சிவகங்கை.*
*முகவை மாவட்டம் □ இராமநாதபுரம்*
*நாகை மாவட்டம் □ வேதாரண்யம்*
*மதுரை மாவட்டம் □ மதுரை, திருமங்கலம்*
*தேனி மாவட்டம் □ சின்னமனூர்*
*விருதுநகர் மாவட்டம் □ திருவில்லிபுத்தூர்*
*தூத்துக்குடி மாவட்டம் □ தூத்துக்குடி, ஆழ்வார் திருநகரி*
*நெல்லை மாவட்டம் □ அம்பாசமுத்திரம், தென்காசி*
*கன்னியாகுமரி மாவட்டம் □ நாகர்கோவில், அருமனை*

■ **ஆறுமுகம்**

# தமிழ்வழிப் பள்ளிகள் கூட்டமைப்பின் நிலையும் வேண்டுகையும்..

**சிவ செந்தமிழ்வாணன்**
தாய்த் தமிழ்வழிப் பள்ளி, அம்பத்தூர்

18 தாய்த்தமிழ்ப் பள்ளிகளின் கூட்டமைப்பு தமிழ்வழிப் பள்ளிகளை இணைத்துக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இந்த 18 பள்ளிகளும் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தற்சார்புப் பள்ளிகளாகக் குறைந்த கட்டணத்திலும் மக்கள் கொடுக்கும் சிறு உதவிகளாலும் நடைபெற்று வருகின்றன.

அரசு, இந்தப் பள்ளிகளுக்கு அரசாணை எண் 41 ஐ இந்த ஆண்டு வெளியிட்டுள்ளது. அதில், ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் தமிழ்வழிக் கல்வி கற்று வரும் அரசு உதவி பெறாத 47661 குழந்தைகளுக்கும் 2023 ஆம் கல்வியாண்டில் சுவடிகள் புத்தகம் உள்ளிட்ட 11 வகையான நல உதவிகள் வழங்குவதற்கு 16. 02. 2023 அன்று ஆணை பிறப்பித்துள்ளது. இந்த 47 ஆயிரத்து 661 குழந்தைகளில் நமது அறக்கட்டளையில் உள்ள 18 பள்ளிகளில் படித்து வரும் 1108 குழந்தைகளுக்கும் 11 வகையான பொருள்கள் கிடைப்பதில் மகிழ்ச்சி நன்றி.

பள்ளிக் கல்வித் துறை இந்த அளவில் தமிழ் வழிக் கல்விக்கு ஆணை வழங்கியிருக்கிறது.

தாய்த் தமிழ்க் கல்விப் பணி அறக்கட்டளை கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் பெருஞ்சுமையுடன் பள்ளிகளை நடத்தி வருவது எளிதான செயல் இல்லை. தாய்த் தமிழ்ப் பள்ளிகளை, கட்டணம் பெற்றுக் கொண்டு சுமையற்று நடத்தி வரும் மற்ற பள்ளிகளோடு அரசு இணைத்துப் பார்ப்பது கூடாது. அந்தப் பள்ளிகளுக்கும் தாய்த் தமிழ் பள்ளிகளுக்கும் உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு.

இந்தக் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் அரசு ஒதுக்கி இருக்கும் தொகை 40 ஆயிரத்து 299 கோடியாகும். இந்தக் கோடிகள் அனைத்தும் தமிழ்வழிக் கல்வி வளர்ச்சிக்கானவையன்று. பெரும்பாலும் அரசுப் பள்ளிகளிலும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் தமிழ்வழிக் கல்வி என்பது மிக மிகக் குறைந்து வருகிறது.

அரசு, தனியார் பள்ளிகளுக்கு என்று இயக்ககம் நடத்தி வருகிறது. அதில் தமிழ்வழிக் கல்விக்கு என்று தனியே இயக்ககம் இல்லை. எமது பள்ளிச் சிக்கலைத் தீர்த்துக் கொள்ள பள்ளிக் கல்வித் துறையில் நுழைந்தால் எல்லாப் பள்ளிகளுக்குமானச் சட்டத் திட்டங்களையும் எமது தாய்த் தமிழ்க் கல்விப் பணி பள்ளிகளுக்கும் பொருத்திப் பார்க்கப்படுகிறது.

எமது சிக்கலைத் தீர்த்துக் கொள்ள பள்ளிக்கல்வித்துறை தனியாகத் தமிழ்வழிக் கல்வி இயக்ககத்தை உருவாக்க வேண்டும். தாய்த்தமிழ் பள்ளிகளில் கல்வி தொண்டாக நடைபெற்று வருகிறது. இங்கே பணத்தை மூட்டையாகக் கட்டும் பணி நடைபெறுவது இல்லை. எல்லாம் தெரிந்தே தாய்த் தமிழ்ப் பள்ளிகளைக் கையேந்தும் நிலையில் வைத்திருக்க அரசு எண்ணுகிறதோ என்றும் புலப்படவில்லை. தமிழ் வளர்ச்சித் துறையில் தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கான தேவை குறித்துக் கருத்துரு ஒன்றை இந்த ஆண்டின் தொடக்கத்தில் கொடுத்துள்ளோம். அந்தக் கருத்துருவிற்கு இந்நாள் வரை எந்த விடையும் நாங்கள் பெறவில்லை.

ஆனால், தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநரகத்திடம் கேட்ட பொழுது "தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சித் துறை செயலர் அலுவலகத்தில் உங்கள் கோப்பு உள்ளாதாகத் தெரிகிறது. நாங்கள் தலைமைச் செயலகம் சென்று அணுகிய போது "அப்படி ஒரு கோப்பு இதுவரையிலும் எங்கள் அலுவலகம் வரவில்லை " என்பதாகவே அறிந்தோம்.

சரி போகட்டும் என்று தொடர்புடைய அமைச்சர் அவர்களை நான்கு முறை முயன்று ஐந்தாம் முறை கண்டோம். இதுகுறித்துக் கேட்டோம் அவர் நீங்கள் பள்ளிக் கல்வித் துறையில் முறையிட வேண்டும்.. நாங்கள் என்ன செய்ய முடியும் என்று முதலில் கூறிய பிறகு நாங்கள் படும் துன்பங்களை எடுத்துச் சொன்னபோது "எல்லாம் நாங்கள் அறிந்ததே ஆனால், நாங்கள் உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதுதான் எங்களுக்கு இன்னும் விளங்கவில்லை " என்று கூறினார்.

மேலும் நாங்கள் அழுத்தம் கொடுத்துக் கேட்ட பொழுது "முயலுகிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டார்.. தமிழ் வழிக் கல்வி வளர்ச்சிக்குத் துணைநின்றால் நல்லதே.

அரசுக்கு, தாய்த்தமிழ் கல்விப் பணி அறக்கட்டளை முன்வைக்கின்ற கோரிக்கைகள்.

தாய்த் தமிழ் பள்ளிகள் அரும்பாடுபட்டு நடத்திவரும் தமிழ்வழிக் கல்வியைப் பாதுகாக்க வேண்டி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டும்.

தாய்த்தமிழ்ப் பள்ளிகளைத் தரம் உயர்த்த ஐந்தாம் வகுப்பு வரையிலும் நடத்திக் கொண்டு வரும் 16 பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக அறிவித்து நிலை உயர்த்த வேண்டும்.

தமிழ் வழிக் கல்விக்கென்று இயக்ககம் அமைத்திட வேண்டும்.

தமிழ் வளர்ச்சித் துறை, தாய்த் தமிழ் தமிழ் வழிப் பள்ளிகளைத் தன்துறையின் கீழே கொண்டு சென்று எல்லா உதவிகளையும் செய்திடவேண்டும்.

அமைப்புகளுக்கு வேண்டுகோளாகத் தமிழ்வழிப் பள்ளிகள் சிலவற்றை முன் வைக்கின்றன..

தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வியில் அக்கறையுள்ள அமைப்பினர் அனைவரும் தமிழ்வழிக் கல்விக்குத் துணை நிற்க வேண்டும்.

# மீனவர்களின் இடத்தை அத்துமீறிப் பறித்துக் கொண்டு மீனவர்களையே அத்துமீறுகிறார்கள் என்பது ஞாயமா?





சென்னையின் வரலாறு என்பது மீனவ சிற்றூர்களிலிருந்து தொடங்குகிறது. சென்னையின் மண்ணின் குடிகள் மீனவர்களே. இந்நிலையில் சென்னைக் கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரை உள் சாலையில் மீனவ மக்கள் பிடித்து வந்த மீன்களையும், வலைகளையும் பல ஆண்டுகளாக உலர்த்தியும், மீன்களை விற்றும் வருகின்றனர். இந்த சாலை என்பது முழுக்க முழுக்க மீனவ மக்களின் பயன்பட்டில் இருந்துவந்தது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புதான் மாநகராட்சி நிர்வாகம் மீனவர்களிடையே பேசி சாந்தோம் சாலையின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகக் காலையும், மாலையும் இரண்டு மணி நேரம் மட்டும் பொது போக்குவரத்துக்கு அனுமதி பெற்றுள்ளனர்

ஆனால் தற்போது சென்னை உயர்நீதிமன்றமும் அரசும் கூட்டுச்சேர்ந்து எவ்வித முன்னறிவிப்பின்றி 12 ஏப்ரல் 2023 அன்று அக்கிரமிப்பு அகற்றம் என்ற பெயரில் மீனவ மக்களின் வாழ்வாதாராமாக இருந்த கடைகளைச் சூறையாடியிருக்கிறது.

உழைக்கும் மீனவ மக்களின் வாழ்வாதாரங்களை அழித்துவிட்டு. ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் சிங்கார சென்னை என்ற இலக்கை அரசு எப்படி எட்ட முடியும் என்று கேள்வி எழுப்புகின்றனர் உயர்நீதிமன்ற நீதிபதிகள்?

அவர்களுக்கு இங்குள்ள கட்டிடங்களும் கடற்கரையும் அழகாய்த் தெரிய வேண்டுமே தவிர மக்களின் வாழ்க்கை எக்கேடுகெட்டாலும் கவலை இல்லையா?.

சிங்காரச் சென்னை காப்பதற்குத் தாமாக முன்வந்து பொதுநல வழக்கு தொடுத்துக் கடைகளை அகற்ற ஆனண பிறபித்த நீதிபதிகள் கூடங்குளம் அணுமின் நிலைய அணுக்கிழிவுகளைக் கடலில் கொட்டப்படுவதைத் தடுக்க தாமாக முன்வந்து பொதுநல வழக்குத் தொடுக்குமா?

சிங்களக் கடற்படையும் இந்தியக் கடற்படையும்தான் தமிழ்நாட்டு மீனவனைச் சுட்டுத் தள்ளுகிறது. தமிழக அரசும் சிங்காரச் சென்னை என்கிற பெயரில் மண்ணின் குடிகளை ஆக்கிரமிப்பாளர்களாகக் கருதுவது கண்டனத்துக்குரியது.

தமிழக அரசு உயர்நீதிமன்ற ஆணை என்று காரணம் சொல்லாமல் மீனவ மக்கள் பக்கம் நிற்க வேண்டும்

உடனே சென்னை கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரை உள் சாலையை மீன்பிடி மண்டலமாக அறிவிக்க வேண்டும்.

உள் சாலையில் பொது போக்குவரத்தைத் தடை செய்து மீனவ மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் . ■ **பரத்**




# விடுதலை

## திரைப்படத் திறனாய்வு

■ *பாலாஜி தியாகராஜன்*
*`மெட்ராசு ரிவ்யூ`*

இயக்குநர் வெற்றிமாறனின் விடுதலை□1 திரைப்படம் வெளியாகி திரைப்படப் பார்வையாளர்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. வெற்றிமாறனுடைய முந்தைய மூன்று படங்கள் போலவே, இத்திரைப்படமும் அரசியல் தளத்தில் காத்திரமான உரையாடல்களையும் நிகழ்த்தத் தவறவில்லை.

மிகக் குறிப்பாக இத்திரைப்படத்தில் இடம்பெற்ற சம்பவங்கள், கதாபாத்திரங்கள் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியின் ஒரு பிரிவாக இருந்த தமிழ்நாடு விடுதலைப் படை மற்றும் அந்த அமைப்புகளின் முன்னணித் தலைவர்களான தோழர்கள் புலவர் கலியபெருமாள், தமிழரசன்ஆகியோரைத் தமிழர் மக்கள் படை; என்றும், பெருமாள் வாத்தியார், ; என்றும் சித்தரித்துப் படமாக்கப்பட்டுள்ளது.

இதன் காரனமாக வெகுமக்கள், திரைப்பட விரும்பிகள் மற்றும் வலையொலி உள்ளிட்ட சமூக வலைத்தள பயன்பாட்டாளர்களிடையே தமிழ்நாடு விடுதலைப் படையும், தோழர்கள், புலவர் கலியபெருமாள் மற்றும் தமிழரசன் ஆகியோரும் பேசுபொருளாயினர்.

தோழர்கள் தமிழரசன் மற்றும் புலவர் கலியபெருமாள் ஆகியோரின் தமிழ்த்தேசப் போராட்ட வாழ்க்கை வரலாற்றை இக்கால வெகுமக்கள் தரப்பு அறிந்து கொள்வதற்கு விடுதலை1 திரைப்படம் பயன்பட்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகது. இது இத்திரைப்படம் உருவாக்கியுள்ள முக்கியமான நேர்மறை விளைவு ஆகும். மேற்சொன்ன நேர்மறை விளைவைத் தவிர்த்து பார்த்தால், இத்திரைப்படம் குறித்தான திறனாய்வுகளும் எழாமல் இல்லை.

தமிழ்நாடு விடுதலைப் படை மற்றும் அதன் முன்னணித் தோழர்கள் பற்றிப் பேசப்படுவதற்குரிய வாய்ப்பமைந்ததை நேர்மறை விளைவாகப் பார்க்கின்ற தோழர்கள் கூடப் படத்தின் முதல் காட்சியான தொடர்வண்டி விபத்துக் காட்சி மற்றும் காவல் நிலைய அரசியல் கொலைக் காட்சியில் ;பெருமாள் வாத்தியார்; சித்தரிக்கபட்ட வகை குறித்துத் தங்களது வருத்தத்தையும், விமர்சனத்தையும் பதிவு செய்திருந்தனர்.

**விடுதலை பேச விழைவது என்ன?**

விடுதலை 1 இன் கதை என்பது, அருமபுரி மலைப்பகுதியில் கனிமவளச் சுரங்கம் அமைக்கப்படுவதைப் பெருமாள் வாத்தியார் தலைமையிலான தமிழர் மக்கள் படை எதிர்க்கிறது. சுரங்கத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மக்கள் படையால் தொடர்வண்டிப் பாலத்தில் வைக்கப்பட்ட குண்டு வெடித்து மக்கள் இறக்கிறார்கள் (முதல் பாகத்தின்படி.. இரண்டாம் பாகத்தில் தொடர்வண்டி குண்டு வெடிப்பு சம்பவத்தின் உண்மையான பின்னணி விளக்கப்படுவதாகத் தெரிகிறது). சுரங்கப் பணிக்கான முயற்சியைத் தொடரவும், அதற்கு எதிர்ப்பாக உள்ள மக்கள் படையையும், பெருமாள் வாத்தியாரையும் பிடிக்க அரசால் சிறப்புப் படை அமைக்கப்படுகிறது. சிறப்புப் படையின் ஒரு பிரிவில் பணிக்கு வரும் குமரேசன் எனும் கடைநிலைக் காவலர், மக்கள் படையைப் பிடிக்க தன்னாலான பங்களிப்பை வழங்குவதற்காகப் பணி செய்கிறார்.

உயர் அதிகாரியின் கொடுமைகள் மற்றும் கடைநிலை ஊழியர்களை இரண்டாம்தர ஊழியர்களாக நடத்தும் மோசமான காவல்துறை பணி சூழலுக்கு இடையில் வேலை செய்யும் குமரேசனுக்கான ஒரே ஆறுதலாக இருப்பது தமிழரசியுடனான காதல் மட்டுமே. மக்கள் படையினரைப் பிடிப்பதற்கான காவல்துறை சிறப்புப் படையினரின் தேடுதல் வேட்டையால் தமிழரசி வசிக்கும் மலைக்கிராமம் பாதிப்புக்குள்ளாக்கப்படுகிறது.

நிர்வாணப்படுத்தப்பட்டுச் சித்ரவதைக்குள்ளாக்கப்படும் தமிழரசி உள்ளிட்ட மலைக்கிராமப் பெண்கள், மக்களைக் காவல்துறையின் கொடுமைக ளிலிருந்து காப்பாற்ற, பெருமாள் வாத்தியார் இருக்கும் இடத்தை அறிந்த குமரேசன் காவலர்களின் பெரும் படையுடன் சென்று பெருமாள்வாத்தியாரை பிடிக்கிறார்.. இதுதான் கதை!

மேற்சொன்ன கதையினூடாக, ;மக்களுக்காகச் சேவை செய்யத் தானே காவல்துறை இருக்கிறது; என நம்பும் காவலர் குமரேசன் கதாபாத்திரம், ;தமிழர் மக்கள் படை, பெருமாள் வாத்தியார் மற்றும்

காவல்துறை பற்றிக் கொண்டிருந்த பொதுவான மதிப்பீடு, பணிக்காலத்தில் எதிர்க்கொள்ளக்கூடிய நேரடி அனுபவங்களின் யதார்த்தத்திலிருந்து என்னவாக மாற்றமடைகிறது; என்பதின் வழி பார்வையாளர்களிடத்தில் ஒரு அரசியலைப் பேச முயன்றிருக்கிறார் இயக்குநர். ;காவல்துறை மக்களுக்கானதாக என்றுமே இருந்ததில்லை. மக்களின் நியாயமான அரசியல் குரலுக்கு எதிரானதாகவே, அதை வன்முறை கொண்டு ஒடுக்கக் கூடியதாகவே காவல்துறை இருந்திருக்கிறது என்பதைப் படம் பேச விழைந்த அரசியலாகப் புரிந்து கொள்ளலாம். ஆனால் விடுதலை 1 அதனைப் பேசியிருக்கிறதா?

விடுதலை1 இன் திரைக்கதையானது ஒரு காவலரை முதன்மைப் பாத்திரமாகக் (Protagonist) கொண்டு, அவரின் பார்வையிலிருந்து கதையை விவரித்திருக்கிறது.

`காவல்துறை எதிர் (Vs) மக்கள், மக்கள் போராட்ட இயக்கம்' என்கிற முரண்பாட்டில் காவல்துறைக்குள்ளாக இருக்கின்ற துறை ரீதியான பிரச்சனைகள் மற்றும் மக்களுக்கு எதிரான காவல்துறையின் வன்முறைகள், கொலைகள் குறித்து தெளிவாகப் பதிவு செய்துள்ள விடுதலை 1, மக்கள் போராட்ட இயக்கமான தமிழர் மக்கள் படையின் அரசியல் குறித்து ஒரு தடுமாற்றத்தையே கொண்டிருக்கிறது.

படத்தின் பார்வையாளருக்குத் தொடக்கத்திலே தொடர்வண்டி விபத்தின் கோரத்தையும், அதற்குக் காரணமானவர்களாகத் தமிழர் மக்கள் படையையும் சித்தரித்துக் காட்டிவிட்டு, அதன் பிறகான கதையின் போக்கினை குமரேசன் என்ற கடைநிலைக் காவலரின் பார்வையிலிருந்து விவரிக்க முயன்றதானது, கதையில் பார்வையாளர் தரப்பு மக்கள் படை மற்றும் பெருமாள் வாத்தியார், TA குறித்து என்ன விதமான முடிவுக்கு வருவதென்கிற தடுமாற்றம்; படத்தின் இறுதிவரையிலுமே தொடரக்கூடிய வாய்ப்பை விடுதலை□1 கொண்டிருக்கிறது.

கதையினை விவரிக்கின்ற முதன்மை பாத்திரமான குமரேசன், ;மக்கள் படை, பெருமாள் வாத்தியார்; பற்றிக் கொண்டிருக்கும் தடுமாற்றமே பார்வையாளர்களுக்கும் கடத்தப்பட்டிருக்கிறது.

படத்தில் காவலர் இரகு என்பவர் கொல்லப்படுகிறார். அதற்கு எதிர்வினையாக மலைக்கிராமத்தில் நடத்தப்படும் காவல்துறை வன்முறையில் பழங்குடியினப் பெண் காவல்துறையால் சுட்டுப் படுகொலை செய்யப்படுகிறார். ஊடகங்களில் அந்நிகழ்வானது, மக்கள் படையைச் சாந்தவர் கொல்லபட்ட செய்தியாக; வெளிவருகிறது.

அதேபோல் காவல்துறையின் வதை முகாமிலிருந்த ஒரு முதியவரும், பெண்ணும் காவல்துறையினரால் படுகொலை செய்யப்படுகையிலும் ;அமைச்சரின் வருகையை எதிர்த்து அவரைக் கொல்ல திட்டமிட்ட மக்கள் படையினர் ராகவேந்தர் தலைமையிலான ஈ□கம்பெனியினால் சுட்டுக் கொலை; என்கிற செய்தியாக வெளிவருகிறது.

மக்கள் படையோடு தொடர்பில்லாத அப்பாவிகளான அவர்களைக் காவல்துறை சுட்டுக் கொன்றுவிட்டு, மக்கள் படையினரைச் சுட்டுக் கொன்றதாக மக்களிடம் செய்தி பரப்புகிற அநீதியைக் குமரேசன் உணருகிறான்.

மேலும் கதாநாயகி வழியாக அவளது பெற்றோர் எதிர்கொண்ட காவல்துறைக் கொடுமைகளைப் பற்றியும், மக்கள் படையும், பெருமாள் வாத்தியாரும் அவர்களைக் காப்பாற்றியது பற்றியும், அதன் காரணமாக கதாநாயகியின் சித்தப்பாவான இஞ்சினியர் ரமேஷ் மக்கள் படையுடன் இணைந்தது பற்றியும் குமரேசன் அறியும் பொழுது ;மக்கள் படை பற்றியும், பெருமாள் வாத்தியார் பற்றியும்; அவன் கொண்டிருந்த நிலைப்பாட்டில் மாற்றம் வருகிறது.

குமரேசனின் நிலைப்பாட்டில் இப்படியாக மாற்றங்கள் உருவாகும் சமயத்திலே, அவனது காதலி உள்ளிட்ட மலைக்கிராம பெண்களை

நிர்வாணப்படுத்தி காவல்துறை சித்ரவதை செய்கிறது;

இதற்குக் காரணமாக இருப்பது பெருமாள் வாத்தியார் என நம்பி அவரைத் தேடிப் பிடிக்க ஒடுகிறான். அவரைப் பிடித்துவிட்டால் மக்களை இன்னல்களிலிருந்து மீட்டுவிடலாம் எனப் பெரு முயற்சியில் இறங்குகிறான்.

படம் பார்க்கிற பார்வையாளர் தரப்பும் குமரேசனுடன் இணைந்து பெருமாள் வாத்தியாரைப் பிடித்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என நம்புகிற இடம் ஏற்படுகிறது; அதன் காரணமாக மக்கள் படையினரைச் சுட்டு வீழ்த்த, குமரேசன் துப்பாக்கியைக் கையில் எடுக்கும் பொழுது கைத்தட்டி ஆர்ப்பரிக்கிறது. பின்னணி இசையும், ஒளிப்பதிவின் அம்சங்களும் குமரேசனுடனான ஒன்றுதலைப் பார்வையாளருக்கு வழங்குகின்றன. இறுதியில் பெருமாள் வாத்தியாரைப் பிடித்துவிடும் குமரேசன் சாதித்த பெருமிதத்துடன், சக காவலர்களின் பாராட்டைப் பெறுகிறான். இனி காவலர்களெல்லாம் ஊருக்குப் போய் அவுங்க, அவுங்க குடும்பத்தோட மகிழ்ச்சியாக இருக்கலாம் எனப் பூரிப்படைகிறான்.

சாமானியக் கடைநிலைக் காவலனொருவன் அரசுக்கும் (காவல்துறைக்கும்), மக்களுக்கும் (?) மிகப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் போராட்டக் குழுத்தலைவரை வெற்றிகரமாகப் பிடிக்கின்ற ;போலீஸ் கதையின்; இயல்பிலேதான் விடுதலை 1 இருக்கிறது.

ஆனால் முற்போக்கு அரசியல் தளத்தில் இயங்குகின்ற தோழர்கள் சிலர் விடுதலை 1ல் உள்ளீடாக ஆங்காங்கே பேசப்படுகின்ற அரசியலை வைத்தும், இயக்குநர் வெற்றிமாறனது முற்போக்கு அரசியல் நிலைப்பாட்டின் மீதான நம்பிக்கையில் இருந்தும் விடுதலை□1 ன் கதை காவல்துறை சார்பானது என்கின்ற விமர்சனத்தை ஏற்க, பொருட்படுத்த மறுக்கின்றனர்.

அவர்கள் குறிப்பிடுவது போலவே விடுதலை□1 உள்ளீடாக, வெவ்வேறு அடுக்குகளில், வெவ்வேறு அரசியலைப் பேசியிருக்கிறது. குறிப்பாக, வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் அவைகளின் மூலம் கிடைப்பதாகக் கூறப்படும் வேலைவாய்ப்புகளின் பேரில் நமது வளங்கள் அந்நிய முதலாளிகளால் சுரண்டப்படுகின்ற அரசியலைப் பேசுகிறது.

TA, சுரங்கத்திற்காக சாலைப் போடும் பணியில் பணியாற்றுகின்ற உழைக்கும் மக்களிடத்திலே தோன்றி,உலகெங்கிலும் பாசிச அரசாங்கங்களால் போடப்படுகிற பெரும் சாலைகளெல்லாம் மக்களின் வளங்களை முதலாளிகள் கொள்ளையடித்துக் கொண்டு செல்வதற்காகவே பயன்படுகிறது. நமது நிலமும், வளமும் முதலாளி களுக்கானதாக இருக்கக்கூடாது. நமது எதிர்காலச் சந்ததியினருக்கானதாக இருக்க வேண்டும். உங்கள் வளத்தை அழிக்க நீங்களே துணைப் போகாதீர்கள் எனப் பேசுகிறார்.

படத்தில் தலைமைச் செயல் அதிகாரி பாத்திரம் பேசுகின்ற வசனங்களின் மூலம், சுரங்கத் தொழிலில் ஈடுபடும் முதலாளிகளுக்கு ஆதரவான அரசின் போக்கை படம் பேசுகிறது;

'காவல்துறையால் பழங்குடியினப் பெண் கொல்லப்பட்டதையடுத்து நீதி கேட்டுப் போராடும் மக்கள், மக்கள் படையுடன் மேலும் நெருங்கிடாமல் இருக்க, மக்கள் படையிடமிருந்து மக்களைத் தனிமைப்படுத்தும் நோக்கில், எதிர்க்கட்சிகளைப் போராட அனுமதிக்க வேண்டும்' என்கிறார் தலைமைச் செயலாளர். தமிழர் மக்கள் படை போலல்லாது சமூகப் பிரச்சனைகளுக்கான எந்தவொரு மக்கள் நடவடிக்கையும் அரசியலமைப்புக்குட்பட்டதாக (Constitution Ambit) இருந்திட வேண்டுமென்று அதிகார வர்க்கம் கவனமாக இருப்பதைப் படம் குறிப்பிட்டு காட்டுகிறது.

அதேபோல் பொதுப்பணித்துறை அமைச்சராக வரக்கூடியவர் அந்நிய, அமெரிக்க முதலீட்டிற்கு ஆதரவாகப் பேசக்கூடிய காட்சியும் இடம்பெற்றுள்ளது. மக்கள் போராட்டக் குழுக்களை ஒடுக்குவதற்கான எதிர் நடவடிக்கையாக (Counter Insurgency) அதிகார வர்க்கம் கையாளும் உத்திகளை சுனில் மேனனது கிராமத் திருவிழா பங்கேற்பின் வழி குறிப்பிட்டுக் காட்டுகிறது.

இத்தகைய அரசியல் காட்சிகளினூடே தான் காவல்துறை சார்பான காட்சிகளையும் விடுதலை□1 கொண்டிருக்கிறது என்பதையும் பேசியாக வேண்டியிருக்கிறது.

விடுதலை 1 பல்வேறு அடுக்குகளில் வெவ்வேறான அரசியலை பேசியிருந்தாலும் தொடக்க மற்றும் இறுதிக் காட்சிகளோடு மேற்சொன்ன காட்சிகளும், காட்சியமைப்புகளும் விடுதலை□1 ஐ ஒரு காவல்துறை கதையாக மாற்றியிருக்கிறது.

விடுதலை, இரண்டு பாகங்களைக் கொண்ட திரைப்படமாக உருவாகி யிருக்கிறது. விடுதலைத் திரைப்படத்தின் முதல் பாகத்தை ஒரு காவலர் பார்வையிலிருந்து சொல்ல முற்பட்டிருக்கிறார்

இயக்குநர். முதல் பாகமானது காவல்துறைப் போக்கில் அமைக்கப்பட்டிருப்பதை ஒரு திரைக்கதை உத்தியாகக் கூட இயக்குநர் பயன்படுத்தியிருக்கலாம். முதல் பாகமான விடுதலை□1 இன் இறுதியில் வரும் இரண்டாம் பாகத்துக்கான முன்னோட்டம் போன்று அமைக்கப்பட்டுள்ள காட்சித் தொகுப்பில், பெருமாள் வாத்தியார் பாத்திரம் தன் பார்வையிலிருந்து இரண்டாம் பாகத்தின் கதையை விவரிப்பதாக அறிய முடிகிறது. ஒரே சம்பவத்தை இருவேறு பார்வைகளிலிருந்து இருவர் கூறுவதாகச் சொல்லப்படும் திரைக்கதை உத்தியினை இருவேறு பாகங்களாக இயக்குநர் உருவாக்கியிருக்கக் கூடும். ஆகவே விடுதலை திரைப்படத்தின் முழுமையான அரசியல் விமர்சனம் என்பது இரு பாகத்தையும் பொறுத்தே முன் வைக்க முடியும்.

படமாக விடுதலை□1 திரைப்படத்தின் மீதான விமர்சனத்தைக் கடந்து அதனது மூலக்கதையாகக் குறிப்பிடப்படும் எழுத்தாளர் ஜெயமோகனது தொடர்பிலும் விமர்சனங்கள் எழுந்திருப்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது. ஜெயமோகனது துனைவன் சிறுகதையின் தாக்கத்திலிருந்து விடுதலையின் கதையை உருவாக்கியிருப்பதாக வெற்றிமாறன் கூறுகிறார்.

படத்திலும் அதற்குரிய அங்கீகாரத்தை ஜெயமோகனுக்குக் கொடுக்க தவறவில்லை. படமாக பார்க்கிற பொழுது ஜெயமோகனது கதையுடன் படம் எவ்வித தொடர்பையும் கொண்டிருப்பதாக உணர முடியவில்லை. ஆனால் படத்தில் காட்டப்பட்டுள்ள காவல்துறை சிறப்புப் படையின் சித்ரவதை முகாம் உள்ளிட்ட பல விடயங்கள் எழுத்தாளர் ச. பாலமுருகனது சோளகர் தொட்டி நாவலை நினைவுப்படுத்துவதாக உள்ளது. அதனைப் பாலமுருகனும் ஏற்கிறார். மூலக்கதை என்ற பேரில் (படத்தில் அதனை உணர முடியவில்லை என்றபோதும்) ஜெயமோகனுக்குக் கொடுக்கப்பட்ட அங்கீகாரம், பாலமுருகனுக்கு வழங்கப்படாதது விமர்சனத்திற்கு உள்ளானது. இயல்பிலே வலதுசாரியான, இடதுசாரிகள் மீது அரசியல் காழ்ப்பைக் கொண்டுள்ள ஜெயமோகன் விடுதலையின் பேரில் அங்கீகரிக்கப்பட்டதானது, விடுதலை தொடர்பான நேர்காணல்களைப் பயன்படுத்தி இடதுசாரிகள் குறித்து எவ்வித அடிப்படை முதன்மையும் இல்லாத அவதூறுகளை அவர் பேசுவதற்கான வாய்ப்பை வழங்கியிருக்கிறது. அரசியலாக, விடுதலையில் ஜெயமோகனுக்கு வழங்கப்பட்ட இடமென்பது விடுதலை முன் வைப்பதாக அறியப்படும் அரசியலுக்கு எதிர் அரசியலுக்குரிய வாய்ப்பை உருவாக்கிவிட்டது போல அமைந்துவிட்டது.

திரைப்படங்கள் ஒரு வலிமையான அரசியல் ஊடகங்கள் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. எதைத் திரைப்படமாக சமூகத்தில் திரையிட்டுக் காட்டப்பட வேண்டும் என்பதில் காலந்தோறும் ஒரு அரசியல் நிலைநிறுத்தப்படுகிறது.

இத்தகைய சூழலில் மேற்சொன்ன திறனாய்வுகளைக் கடந்துத் தமிழர் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த ஒரு முக்கியமான இயக்கத்தையும், அதன் தலைவர்கள் குறித்தும் திரைப்படமாகச் சித்தரிக்கப்பட்ட முயற்சி (இரண்டாம் பாகத்தில் அவர்களது அரசியல் நியாயம் பேசப்படும் என்கிற நம்பிக்கையில்) வரவேற்கதக்கது.

தமிழ்த் திரைப்படங்களுக்கான, திரைப்பட ஆர்வலர்களுக்கான கதைக்கூறுகளாக அரசியல் கதைகள் இடம்பெறுவது உள்ளபடியே, ஒரு சமூகம் எதை தனக்கானதாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது என்பதில் நிகழ்ந்த முன்னேற்றமாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த வகையில் இயக்குநர் வெற்றிமாறன் தன் சமகாலத்திய திரைப்படப் போக்கில் சிறப்பான பங்களிப்பைச் செய்வதாகவே தெரிகிறது. தமிழர் வரலாற்றில், தமிழ்த்தேசிய வரலாற்றில் பல்வேறு சம்பவங்கள் திரைப்படத்திற்கான கதைக்கருக்களை கொண்டிருப்பவை. அவை திரையரங்கின் திரைகளில் காட்சிப்படுகையில் ஏற்படுத்துகிற சமூகத் தாக்கம் அரசியல் அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது. அத்தகைய முயற்சிகளுக்கான ஒரு வெளி உருவாகி வருகின்ற பொழுது சில நிறை, குறைகள் இருக்ககூடும்; இருப்பதும் இயல்பு. அந்தளவிலே விடுதலை 1 தொடர்பான திறனாய்வுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்வோம்.

வெளியீட்டுக் குழு : பொழிலன், முத்தமிழ், நிலவழகன்

**தமிழ்நாடு** (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874

மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com

அட்டோர் : முகாம்பிகை அச்சகம், 24, வாணியர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005